MJSSH Muallim Journal of Social Science and Humanities

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

# மாணவர்களின் ஆய்வுச் சிந்தனையைத் திருக்குறள் கட்டுரையின் வழி கண்டறிதல்

# ANALYSIS THE LEVEL CRITICAL THINKING AMONG STUDENTS THROUGH *THIRUKKURAL* ESSAY

**பூங்கொடி முருகையா[1] / Poongkodi Murugaya[1]**

[1]உலு திராம் இடைநிலைப்பள்ளி, உலு திராம், ஜொகூர், மலேசியா. / Ulu Tiram Secondary School, Ulu Tiram, Johor, Malaysia.
மின்னஞ்சல் / Email: m.poo_1404@yahoo.com

## Abstract

Critical thinking skills are indeed a vital skill for a person in improving their life standard. A student who practices this skill in daily life is proven more capable of solving problems they face. Literature is written in the proper essence of a language, positively plays an important role in developing the critical thinking skills. *Thirukkural* is a classic Tamil literature consisting 1330 couplets. This study was carried out to analysis critical thinking among students through *Thirukkural* essays. The relationship between *Thirukkural* and critical thinking was also studied from this research. This study was conducted among 20 students from Perak secondary school. A couplet from *Thirukkural* that emphasize the discipline was chosen as a topic for essay writing for this research. The researcher used five elements that are understanding, correlating, inquiries, decision-making skills and concluding it with a detailed summary of critical thinking to evaluate the students' essays. The data was collected based on the essay written by students. The data was evaluated using five elements from critical thinking. The findings of the research show that *Thirukkural* develops critical thinking skills of students. Other than that, this study also prevails the relationship between *Thirukkural* and critical thinking.

**Keywords**: *Thirukkural*, Critical Thinking, Couplet

## ஆய்வுச் சாரம்

தமிழ்மொழி இலக்கியங்கள் மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்குப் பெறும் பங்காற்றுகின்றன. இலக்கியங்களின் வழி மாணவர்களுக்கு ஆய்வுச் சிந்தனை சென்றடையும் என்பது திடமாக

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

நம்பப்படுகின்றது. அவ்வகையில், திருக்குறளின் வழி மாணவர்கள் எவ்வாறு தங்களுடைய ஆய்வுச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றனர் என்பதனைக் கண்டறிய இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு மூன்று நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அவை, திருக்குறள் மாணவர்களின் ஆய்வுச் சிந்தனைக்கு வித்திடுகிறது என்பதனை நிருபித்தல், மாணவர்கள் திருக்குறளின் வழி ஆய்வுச் சிந்தனையுடன் செயல்படுகின்றனர் என்பதைக் கண்டறிதல் மற்றும் மாணவர்கள் திருக்குறளை எந்த அளவிற்கு உய்த்துணர்ந்து உள்ளனர் என்பதைக் கண்டறிதல் போன்றவை ஆகும். மேலும், திருக்குறளுக்கும் மாணவர்களின் ஆய்வுச் சிந்தனைக்கும் உள்ள தொடர்பு இவ்வாய்வின் வழி கண்டறியப்பட்டது. பேராக் மாநிலத்தில் உள்ள ஓர் இடைநிலைப்பள்ளியில் நடத்தப்பட்டது. படிவம் ஒன்றையைச் சேர்ந்த 20 மாணவர்கள் இவ்வாய்விற்கு உட்படுதப்பட்டனர். இவ்வாய்வில், மாணவர்கள், "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" (குறள் 130) என்ற திருக்குறளை ஒட்டி மாணவர்கள் எழுதிய கட்டுரையின் வழி மாணவர்களின் ஆய்வுச் சிந்தனை கண்டறியப்பட்டது. மாணவர்களின் ஆய்வுச் சிந்தனை கருத்துணர்தல், தொடர்புப்படுத்துதல், முன்னுரைத்தல், தீர்மானித்தல், நிருபித்தல் என்ற அடிப்படையில் பகுப்பாய்வுச் செய்யப்பட்டன. ஆய்வின் முடிவில், திருக்குறளின் வாயிலாகப் பெரும்பான்மையான மாணவர்களின் ஆய்ந்து சிந்திக்கும் திறன் வெளிப்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டது. திருக்குறள் மாணவர்களை பல கோணங்களில் சிந்திக்க வைத்துள்ளது என்பதும் இவ்வாய்வில் வழி வெளிப்பட்டுள்ளது. ஆக, திருக்குறள் மாணவர்களின் ஆய்வுச் சிந்தனைக்கு வித்திடுகின்றது என்பது இவ்வாய்வில் உறுதிச் செய்யப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்:** திருக்குறள், ஆய்வுச் சிந்தனை, குறட்பாக்கள்

## முன்னுரை

போட்டிகள் நிறைந்த இவ்வுலகில், பிறருடன் பீடு நடைப் போட ஒரு மனிதனுக்கு எதனையும் அலசி ஆராயும் ஆய்வு நிலை சிந்தனை இன்றியமையாத ஒன்றாகும். அப்போதுதான் இவ்வுலகின் போட்டிமிக்கத் தன்மைக்கு ஈடுக்கொடுக்க இயலும். இவ்வாய்வு சிந்தனையை மாணவர்களிடையே வளர்க்கும் ஓர் ஊடகமாகப் பள்ளிக்கூடம் திகழ்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டே மலேசிய திருநாட்டில் முறையாகச் சிந்தனையைக் கற்பிக்கும் முயற்சி 1990-களில் தொடங்கியது எனலாம் (நாராயணசாமி, 2012)[1]. தேர்வு நோக்கத்திற்காக மட்டும் இத்திருக்குறளை மாணவர்கள் கற்பதால், திருக்குறளில் நற்சிந்தனைகளை உய்த்துணர்வதில்லை (கார்த்திகேஸ், 2005)[2]. இதனால், திருக்குறளில் உள்ள நற்சிந்தனைகளை வாழ்க்கையில் அமல்படுத்த தவறுகின்றனர். திருக்குறளை ஒரு மாணவன் ஆய்வுச் சிந்தனை நோக்கில் பார்ப்பதன் வழி பல நற்சிந்தனைகளை வாழ்க்கைக்கு அமல்படுத்த இயலுகின்றது. இக்காலக்கட்டத்தில், ஒவ்வொரு மாணவர்களுக்கும் ஆய்வுச் சிந்தனை முக்கியக் கூறாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக மாணவர்களிடம், ஆய்வுச் சிந்தனை இருக்க வேண்டியது என்பது காலத்தின் கட்டாயம் எனலாம் (இராஜேந்திரன், 2008)[3]. ஆய்வுச் சிந்தனை ஒரு மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றது. இதனை

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

அடிப்படையாகக் கொண்டு, "மாணவர்களின் ஆய்வுச் சிந்தனையைத் திருக்குறள் கட்டுரையின் வழி கண்டறிதல்" என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு பின்னனி**

மனிதனின் சிந்தனைத் திறனைப் பல கோணங்களில் தூண்டும் விதத்தில் நமது தமிழ்மொழியில் பல இலக்கிய படைப்புகள் குவிந்துள்ளன. மாணவர்கள் இவ்விலக்கியங்களை உய்த்துணர்வதற்காக நமது மலேசியக் கல்வி அமைச்சின் கலைத் திட்ட மேம்பாட்டுப் பிரிவினர் தொடக்கம் மற்றும் இடைநிலைப்பள்ளிகளுக்கான பாடத்திட்டத்தில் இலக்கியங்களை இணைத்துள்ளனர். இடைநிலைப்பள்ளிக்கான பாடத்திட்டத்தில் இலக்கியங்களான திருக்குறள், செய்யுள், நாலடியார் போன்றவைகள் இணைக்கப்பட்டதன் காரணங்களில் ஒன்று, மாணவர்கள் ஆய்வுச் சிந்தனையோடு இலக்கியங்களை உய்த்துணர்வதற்கே ஆகும் எனலாம் (கார்த்திகேஸ், 2005)[2]. ஆனால், இன்றைய கால சூழலில் பள்ளிகளில் இலக்கியங்களின் வழி கற்றல் கற்பித்தலில் ஆய்வுச் சிந்தனை எந்த அளவிற்கு மாணவர்களிடம் சென்று அடைந்துள்ளது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது (நாராயணசாமி, 2012)[1]. எனவே, இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஓர் ஆய்வினை மேற்கொள்வது அவசியமானது ஆகும்.

**ஆய்வுச் சிக்கல்**

தற்போதைய கால சூழலில் இடைநிலைப் பள்ளிகளில் மாணவர்கள் படிப்பதைக் கிளிப்போல் ஒப்புவிக்கும் தன்மையையே கொண்டுள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் படிக்கும் கல்வியை ஆய்வு செய்து சிந்தித்துக் கற்பதில்லை. மாணவர்கள் தேர்வு நோக்கத்திற்காக மட்டும் இத்திருக்குறள்களைக் கற்பதால், திருக்குறள் பகுதியைப் படிக்கும் போது அதன் விளக்கத்தை மட்டும் மனனம் செய்து கொள்கின்றனர் (கார்த்திகேஸ், 2005)[2]. அதன் உட்கருத்தை ஆய்வு செய்வதில்லை. இதனால் மாணவர்கள், திருக்குறளில் உள்ள வாழ்க்கைகுத் தேவையான நற்பண்புகளைக் கற்க தவறுகின்றன. இது, மாணவர்களின் கட்டொழுங்கு சிக்கலுக்கு வித்திடுகின்றது. திருக்குறளை ஆய்ந்து பார்க்கும் நிலையை மாணவர்களுக்கு ஏற்படுத்தினால் நற்சிந்தனைகளைக் கொண்டவர்களாக மாணவர்கள் திகழலாம் (விசுவநாதன், 1953)[4].

**ஆய்வின் கருதுகோள்**

மாணவர்கள் ஆய்வுச் சிந்தனையைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்டுள்ள குறளை ஒட்டி கட்டுரையை எழுதினால் கீழ்காணும் கருதுகோள்கள் கிடைக்கப்பெறும் என்று கணிக்கப்படுகின்றது. இவ்வாய்வில் சில கருதுகோள்கள் ஆய்வாளரால் முன் வைக்கப்படுகின்றன. குறிப்பாக,

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓமப்படும்

என்ற குறளின் வழி, ஆய்வுச் சிந்தனையைப் பயன்படுத்தி கட்டுரை எழுதும் போது, சில கருத்துக்களை முன் வைப்பர். அவர்கள் முன் வைக்கக் கூடிய கருத்துக்களையே ஆய்வாளர் கருதுகோளாக முன் வைத்துள்ளார். «¨Å;

- கருத்துணர்தல் அடிப்படையில்,
  - திருக்குறளுக்கான விளக்கம் கூறுவர்.
  - ஒழுக்கம் என்பது உயிருக்கு நிகரானது என்ற கருத்தை முன் வைப்பர்.
  - நல்ல பழக்க வழக்கங்கள், நன்னடத்தையைக் கொண்டிருத்தல் ஒழுக்கமாகும் என்ற சிந்தனையை முன் வைப்பர்.
- தொடர்புப்படுத்துதல் அடிப்படையில்,
  - ஒழுக்கத்தை நல்ல பழக்க வழக்கங்களுக்குத் தொடர்புப்படுத்துவர்
  - ஒழுக்கத்தைத் தீயப் பழக்கங்களுக்குத் தொடர்ப்புப்படுத்துவர்.
  - ஒழுக்கத்தைத் தற்போதைய வாழ்க்கைவுடன் இணைத்துத் தொடர்ப்புப்படுத்துவர்.
- முன்னுரைத்தல் அடிப்படையில்,
  - ஒழுக்கம் இல்லையேல் ஏற்படும் தீமையை முன் வைப்பர்.
  - ஒழுக்கமாக இருந்தால் நன்மைகள் அடையலாம் என்ற கருத்தினை முன் வைப்பர்.
- தீர்மானித்தல் அடிப்படையில்,
  - பெரியர்களிடம் நல்ல பண்புகளைக் கொண்டு நடப்பர்.
  - ஒழுக்கத்தை மிக உயர்வாகக் கருத வேண்டும் என்று தீர்மானிப்பர்.
  - ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுப்படக்கூடாது என்று தீர்மானிப்பர்.
- நிÕபித்தல் அடிப்படையில்,
  - ஒழுக்கமின்மையால் நடந்த சம்பவங்களை எடுத்துக்காட்டாகத் தருவர்.
  - ஒழுக்கக் கேடான செயல்களை எடுத்துக்காட்டாகத் தருவர்.

இவ்வாறாக, ஆய்விற்கு ஆய்வுச் சிந்தனைக்கு ஏற்ப வகுக்கப்பட்டுள்ள கருதுகோள்களுக்கு ஒட்டிய தகவல்களைò தங்கள் கட்டுரைகÇ¢ø பயன்படுத்தியிருப்பின் கொடுக்கப்பட்டுள்ள திருக்குறளை முழுமையாக மாணவர்கள் ஆய்வுச் சிந்தனையைக் கொண்டே எழுதியிருக்கின்றனர் என்பதனை நாம் அறியலாம். இந்த அடிப்படையிலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு மு¨Èமை

இவ்வாய்வு ¸கலப்பு முறையை அடிப்படையகாக் கொண்ட ஆய்வாக அமைந்துள்ளது.. முதலாம் படிவ மாணவர்கள,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம் உயிரினும் ஓமப்படும்"

±ýÈ திருக்ÌÈû ஒட்டி எழுதிய கட்டுரைகள் வழி தரவுகள் திரட்டப்பட்டன. அதனைத் தொடர்ந்து, மாணவர்களின் கட்டுரையில் வெளிப்பட்டிருக்கும் ஆய்வுச் சிந்தனைகள் ஐந்து கூறுகளாக அதாவது கருத்துணர்தல், தொடர்புப்படுத்துதல், முன்னுரைத்தல், நிரூபித்தல், தீர்மானித்தல் போன்ற கூறுகள் அடிப்படையில் பகுக்கப்பட்டு விளக்கியல் அடிப்படையில் விளக்கப்பட்டது. இவ்வாறு தொகுக்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் புள்ளி விபர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டன. இவ்வட்டணையை அடிப்படையாக்கி கொண்டு இவ்வாய்வுக்கான பொருட்பெயர்ப்புச் செய்யப்பட்டது. ஆய்வாளர் பொருட்பெயர்ப்பு பெரும்பகுதி எண்களைப் பயன்படுத்தி பொருட்பெயர்ப்பு செய்யப்பட்டது. நேர்காணலின் வழி திரட்டப்பட்ட தகவல்கள் ஆய்வுச் சிந்தனையையும் திருக்குறளையும் தொடர்புப்படுத்தி விவரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன.

## ஆய்வின் நோக்கம்

இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டதற்குப் பல நோக்கங்கள் உள்ளன. அவை,

- திருக்குறள் மாணவர்களின் ஆய்வுச் சிந்தனைக்கு வித்திடுகிறது என்பதனை நிரூபித்தல்.
- மாணவர்கள் திருக்குறளின் வழி ஆய்வுச் சிந்தனையுடன் செயல்படுகின்றனர் என்பதைக் கண்டறிதல்.
- மாணவர்கள் திருக்குறளை எந்த அளவிற்கு உய்த்துணர்ந்து உள்ளனர் என்பதைக் கண்டறிதல்.

## ஆய்வுக் கருவி

இந்த ஆய்வில், மாணவர்கள் திருக்குறள் ஒட்டி எழுதிய கட்டுரைகள், ஆசிரியர்களின் நேர்காணல் ஆகிய இரு ஆய்வுக் கருவிகû பயன்படுத்தப்பட்டுள்ளன. மொத்தம் 20 கட்டுரைகள் இவ்வாய்வின் கருவியாக விளங்கின்றன. இந்த ஆய்வில் நேர்காணல் என்ற கருவியையும் பயன்படுத்தி இடைநிலைப்பள்ளியின் தமிழாசிரியரிடம் மாணவர்களின் ஆய்வுச் சிந்தனையை ஒட்டிய கேள்விகள் கேட்கப்பட்டது. ஆசிரியர் கூறிய கருத்துகளை

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

ஒலிநாடாவில் பதிவு செய்து வைக்கப்பட்டுள்ளது. ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆய்வுக் கருவிகளின் நம்பகத்தன்மையை உறுதிசெய்யப்பட்ட பின்னரே ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வுக்கு உட்பட்டோர்

இவ்வாய்வில் பேராக் மாநிலத்தில் மன்ஜோங் மாவட்டத்தில் உள்ள µ÷ இடைநிலைப் பள்ளியைச் சார்ந்த முதலாம் படிவ மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பள்ளியில் முதலாம் படிவத்தில் 120 மாணவர்கள் அவர்களின் தரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு நான்கு வகுப்புகளில் தமிழ்மொழி பாடம் பயில்கின்றனர். இதில், முதல் வகுப்பில் மட்டும் 31 மாணவர்கள் தமிழ்மொழி பாடம் பயில்கின்றனர். இவ்வகுப்பிலிருந்து மொத்தம் 20 மாணவர்கள் மட்டுமே இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்டனர். மேலும், இம்மாணவர்கள் யாவரும் தமிழ்மொழியை யூ.பி.எஸ்.ஆர் தேர்வில் தமிழ்மொழியை ஒரு தேர்வுப்பாடமாக எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் முறையே 11 பேர் ஆண்களும் 9 பேர் பெண்களும் ஆவர். இம்மாணவர்கள் யாவரும் முதல் நிலை முதல் கடை நிலை மாணவர்கள் ஆவர். தொடர்ந்து, இவ்வாய்விற்கான நேர்காணலில் இடைநிலைப்பள்ளியில் தமிழ்மொழி பாடம் போதிக்கும் ஐந்து ஆசிரியர்கள் உட்படுத்தப்பட்டனர். இவர்கள் யாவரும் மன்ஜோங் மாவட்டத்தைச் சார்ந்த ஆசிரியர்கள் ஆகும். இவர்கள் யாவரும் தமிழ்மொழியில் பட்டயப் படிப்பை உயர்க்கல்வியாகப் பெற்றுள்ளனர்.

## ஆய்வின் கண்டுபிடிப்பு

இவ்வாய்வின் கண்டுப்பிடிப்புகள் சில துணைத்தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை,

கருத்துணர்தல் அடிப்படையில்,

- திருக்குறளுக்கான விளக்கம் கூறினர்.

ஆய்வின் முடிவின் படி, ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 20 மாணவர்களில் 17 மாணவர்கள் கொடுக்கப்பட்ட திருக்குறளைச் சரியாகக் கருத்துணர்ந்து உள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது. இவர்கள் கட்டுரையில் திருக்குறளுக்கான விளக்கத்தை எழுதியிருப்பதன் மூலம் இதனை நம்மால் உணர முடிகின்றது. ¼¢Ä மாணவர்கள் முன் வைத்த திருக்குறளின் விளக்கம் இடைநிலைப்பள்ளிக்கான இலக்கண இலக்கிய விளக்கவுரையில் உள்ள திருக்குறளின் விளக்கத்தின் சாயலாக இருந்தது (வரதராசனார், 2000)[5]. மேலும், பல திருக்குறள் புத்தகங்களில் எழுதப்பட்ட அறிஞர்களின் திருக்குறள் விளக்கத்தையும் மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, ஒரு மாணவன்

*"ஒழுக்கம் எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்."*

என்று மு.வரதராசன் அவர்களின் விளக்கத்தை முன் வைத்திருந்தான்.

இதன் வழி, மாணவர்கள் தங்கள் புரிதல் நிலையை வெளிக்காட்டுவதற்குப் பல அறிஞர்களின் திருக்குறள் விளக்க புத்தகங்களைப் படிக்கின்றார்கள் என்பதனை உணரலாம்.

- ஒழுக்கம் என்பது உயிருக்கு நிகரானது என்ற கருத்தை முன் வைத்துள்ளனர்.

ஆய்வில் கிடைக்கப் பெற்ற தகவலின் படி, ஆய்விற்கு உட்படுதப்பட்ட 20 மாணவர்களில் 17 மாணவர்கள் திருக்குறளை நன்கு கருத்துணர்ந்து இருப்பதால் ஒழுக்கம் என்பது உயிருக்கு நிகரானது என்ற கருத்தை முன் வைத்துள்ளனர். ஒழுக்கம் ஒரு மனித வாழ்க்கையில் இன்றியமையாததாக விளங்குகின்றது என்ற சிந்தனை மாணவர்கள் மனதில் வேரூன்ற இத்திருக்குறள் வித்திட்டுள்ளது. எனவேதான் இவ்வாறான சிந்தனையை மாணவர்கள் தங்களின் கட்டுரையில் முன் வைத்துள்ளனர். திருக்குறள் மாணவர்களைப் பல கோணங்களில் சிந்திக்க வைத்திருக்கிறது என்பதற்கு ஆதரமாக ஒரு மாணவன்,

*"மானம் இழப்பதா? அல்லது உயிரை இழப்பதா? என்ற ஒரு கொடிய நிலைமை ஏற்பட்டால் அந்த நிலையிலும் மானத்தை இழக்கக் கூடாது உயிரையே இழந்து விட வேண்டும்"*

என்ற கருத்தின் வழி ஒழுக்கம் உயிருக்கு நிகரானது என்ற சிந்தனையை ஆணித்தரமாகச் சிறப்பாக வலியுறுத்தியுள்ளான். ஆக, திருக்குறள் இம்மாணவனை ஒழுக்கமே உயிருக்கு நிகரானது என்று ஆணித்தரமாகச் சிந்திக்க வைத்துள்ளது.

- நல்ல பழக்க வழக்கங்கள், நன்னடத்தையைக் கொண்டிருத்தல் ஒழுக்கமாகும் என்ற சிந்தனையை முன் வைத்துள்ளனர்.

ஆய்வில் ஆய்வாளர் திரட்டிய தகவலின் படி ஆய்விற்கு உட்படுதப்பட்ட 20 மாணவர்களில் 12 மாணவர்கள் நல்ல பழக்க வழக்கங்கள், நன்னடத்தையைக் கொண்டிருத்தல் ஒழுக்கமாகும் என்ற கருத்தினை முன் வைத்துள்ளனர். இம்மாணவர்கள், கட்டுரையில் பெரியவர்களிடம் மரியாதையாகப் பேசுதல், நன்னடத்தையைப் பேணுதல், பள்ளிக்குச் சுத்தமாக வருதல் போன்ற எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிட்டுள்ளனர். பொதுவாக, இப்பழக்கங்கள் யாவும் இம்மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் அமல்படுத்தும் பழக்கங்கள் ஆகும். ஆக, திருக்குறளைக் கருத்துணர்துணர்ந்ததன் வழி மாணவர்கள் ஒழுக்கம் என்பது நல்ல பழக்க வழக்கங்கள், நன்னடத்தையைக் கொண்டிருத்தல் என்ற சிந்தனையை முன் வைத்துள்ளனர்.

தொடர்புப்படுத்துதல் அடிப்படையில்,

- ஒழுக்கத்தை நல்ல பழக்க வழக்கங்களுக்குத் தொடர்புப்படுத்தியுள்ளனர்.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

ஆய்வின் முடிவின் படி, ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 20 மாணவர்களில் 12 மாணவர்கள் ஒழுக்கத்தை நல்ல பழக்க வழக்கங்களுக்குத் தொடர்புப்படுத்தியுள்ளனர். திருக்குறளை உய்த்துணர்தல் வழி இம்மாணவர்கள் தாங்கள் அன்றாடம் செய்யும் நடவடிக்கைகளைத் திருக்குறளுடன் தொடர்புபடுத்திச் சிந்தித்துள்ளதை இதன் வழி அறியலாம். இம்மாணவர்களின் வரிசையில் ஒரு மாணவன் மிக சிறப்பாக, ஆய்வாளரின் எதிர்பார்ப்புகளையும் மீறி கருத்துக்களை வெளியிப்படுத்திருந்தான். அக்கருத்துப் பின் வருமாறு,

> *"உண்மை பேசுதல், நேர்மையாக நடந்து கொள்ளுதல், பணிவுடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ளுதல், வணக்கம் கூறுதல் போன்றவையும் ஒழுக்கக் குணத்தைக் குறிப்பிடுக்கின்றன. "ஒளவியம் பேசல் என்பதற்கொப்ப மாணவர்கள் தங்கள் தினந்தோறும் வாழ்க்கையில் எல்லோரிடமும் உண்மையே பேசினால் அவர்கள் ஒழுக்கமுள்ள மாணவர்கள் என்று கருதப்படுவார்கள். அதுமட்டுமின்றி, மாணவர்கள் தங்கள் பெற்றோர்களிடம் நேர்மையாக நடந்து கொண்டு பொய்களைப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். மாணவர்கள் பள்ளியில் ஆசிரியர்களைச் சந்தித்தால் வணக்கம் கூறுவது ஒழுக்கமுள்ள மாணவர்களின் பழக்கமாகும். இன்னும் சொல்ல போனால், பள்ளி சீருடை, முடி, நகம், காலணி, காலுறை போன்றவற்றை தூய்மையாக வைத்து இருப்பது ஒழுக்க குணத்தின் கூறுகள் ஆகும். தொடர்ந்து, பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் ஒழுக்கமாகத் திகழ நகங்கங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்."*

இதன் மூலம், திருக்குறளின் வழி மாணவர்களின் சிந்தனைத் திறன் தூண்டப்படுகின்றது நிருப்பிக்கப்பட்டுள்ளது.

- ஒழுக்கத்தைத் தீயப் பழக்கங்களுக்குத் தொடர்ப்புப்படுத்தியுள்ளனர்.

ஆய்வில் கிடைக்கப்பெற்ற தகவலின் படி, 10 மாணவர்கள் ஒழுக்கத்தைத் தீயப் பழக்கங்களுக்குத் தொடர்புப்படுத்தியுள்ளனர். ஒரு மனிதன் எம்மாதியிரியான பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தால் ஒழுக்க மற்றவன் எனக் கருதப்படுவான் பெரும்பாலான அளவில் இம்மாணவர்கள் யாவரும் புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற செயல்களை ஒழுக்கத்திற்குத் தொடர்புப்படுத்தியுள்ளனர். இம்மாணவர்களில் ஒரு மாணவர் மிகவும் சிறப்பான முறையில் ஒழுக்கத்தைத் தீயப் பழக்கங்களுக்குத் தொடர்புப்படுத்தி வரலாற்று அடிப்படையில் தகவலை எழுதியுள்ளான்.

> *"அராப் ஜயிலியா காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்கள் ஒழுக்கமற்ற வாழ்க்கையையே வாழ்ந்தனர் என்று வரலாறு கூறுகின்றது. அக்காலக்கட்டத்தில் ஓர் ஆண் மகன் அளவிற்கு அதிகமான மதுபானத்தை அருந்தி விட்டு போதையில் இருக்கிறார்களோ அவர்களே சிறந்த ஆண் மகன் என்று கருதப்படுவர். அதுமட்டுமின்றி, பிறந்த பெண் குழந்தையை உயிருடன் புதைத்தல், பொய், பித்தலாட்டம், திருட்டு போன்ற ஒழுக்கமற்ற செயல்களைச் செய்துள்ளனர்."*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

ஆக, திருக்குறள் இம்மாணவனை வரலாற்று நிகழ்வுகளுடன் தொடப்புப்படுத்திச் சிந்திக்கும் ஆற்றலுக்கு வித்திட்டுள்ளது என்று இவ்வாய்வின் வழி அறியலாம்.

- ஒழுக்கத்தைத் தற்போதைய வாழ்க்கையுடன் இணைத்துத் தொடர்ப்புப்படுத்தியுள்ளனர்.

ஆய்வின் முடிவுப் படி, ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 20 மாணவர்களில் 5 மாணவர்கள் மட்டுமே ஒழுக்கத்தைத் தற்போதைய வாழ்க்கைக்கு இணைத்துத் தொடர்ப்புப்படுத்தியுள்ளனர். ஒழுக்கத்தை மனிதர்கள் வாழ்க்கையுடன் தொடர்ப்புப்படுத்தி தற்போதைய காலக்கட்டத்தில் எழும் ஒழுக்கச் சீர்கேடுகளை மாணவர்கள் முன் வைத்துள்ளனர். இவ்வாய்வில், ஒரு மாணவர் மிக சிறப்பான முறையில் திருக்குறளைத் தற்போது மக்களிடையே நிலவி வரும் ஒழுக்க சிக்கலுடன் தொடர்ப்புப்படுத்தி தன் கருத்தை முன் வைத்துள்ளார்.

> *“இன்றைய தலைமுறையினர், நவீனம் என்ற பெயரில் ஒழுக்கம் பிறழ்ந்து பல ஒழுக்கக் கேடான செயல்களில் ஈடுப்படுகின்றனர். தற்போதைய உலகில் பரவாலாக ஓரினச்சேர்க்கை எனும் ஒழுக்க மீறலும் தலை விரித்தாடுகின்றது.”*

இம்மாதிரியான கருத்துக்கள் மாணவர்களிடமிருந்து வெளிப்படக் காரணமாக அமைவது, இன்றைய தகவல் ஊடகங்களே ஆகும். ஆக, திருக்குறள், மாணவர்களைத் தாங்கள் பார்க்கும் மற்றும் கேட்கும் தகவல்களோடு தொடர்ப்புப்படுத்திச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

முன்னுரைத்தல்

- ஒழுக்கமாக இருந்தால் நன்மைகள் அடையலாம் என்ற கருத்தினை முன் வைத்துள்ளனர்.

ஆய்வில் கிடைக்கப் பெற்ற தகவலின் படி ஆய்விற்கு உட்படுதப்பட்ட 20 மாணவர்களில் 12 பேர் ஆய்வாளரின் கருதுகோளுக்கு ஏற்றார் போல் ஒழுக்கமாக இருந்தால் நன்மைகள் அடையலாம் என்ற கருத்தினை முன் வைத்தனர். பெரும்பாலான மாணவர்கள் ஒழுக்கம் ஒருவருக்கு இருந்தால், அனைவரும் நம்மை மதிப்பர், பாரட்டுவர் என்ற கருத்தையே முன்னுரைத்துள்ளனர். படிவம் ஒன்று மாணவர்கள் என்பதால், மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒழுக்கமாக இருப்பதால் கிடைக்கபெற்ற நன்மையை ஒழுக்கத்துடன் தொடர்ப்புப்படுத்தி கருத்துக்களை முன் வைத்துள்ளனர். அவ்வரிசையில் ஒரு மாணவன் மிக சிறப்பாக, ஒழுக்கமாக இருந்தால் ஏற்படும் நன்மையை யூகித்து,

> *“ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் இருப்பது ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தாலும் முடிவில் அதுவே பாதுக்காப்பு வளையமாக இருக்கும். ஒழுக்கமின்மை ஆரம்பத்தில் கிளர்ச்சிகளைத் தந்தாலும் முடிவில் எத்தனையோ பிரச்சனைகளுக்கு வேராக நின்று துன்புறுத்தும் என்பதிலும் சந்தேகமில்லை.*

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

> *ஒழுக்கமாக வாழ்பவன் தான் மட்டுமல்லாமல் தன் குடும்பத்தாரையும், தன்னைச் சேர்ந்தவர்களையும் கூட நிறைவாக வைத்திருப்பான். ஒவ்வொரு குடிமக்களும் ஒழுக்க நெறியுடன் இருந்தால் நம் நாடு பிற நாடுகளுக்கிடையே நெஞ்சுயர்த்தி, தோளுயர்த்தி இருக்கலாம்."*

என்ற கருத்தின் வழி தனது சிந்தனையை வெளிட்டுள்ளான்.

- ஒழுக்கம் இல்லையேல் ஏற்படும் தீமையை முன் வைத்தனர்.

ஆய்வில் ஆய்வாளர் திரட்டிய தகவலின் படி, ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 20 மாணவர்களில் 12 மாணவர்கள் ஒழுக்கம் இல்லையேல் ஏற்படும் தீமையினை நன்கு உணர்ந்துள்ளதால் அதனையே கருத்தாக முன்னுரைத்துள்ளனர்.ஒழுக்கம் இல்லையேல் தீமையே ஏற்படும் என்ற சிந்தனையை மாணவர்கள் திருக்குறளின் வழி நன்கு உணர்ந்துள்ளனர் என்பதனை நாம் இதன் வழி உணரலாம்.

> *"உயிரைக் கூட ஒரு நொடியில் இழந்து விடலாம். ஆனால், மானத்தை ஒரு நொடியில் இழந்தால் அக்கம் பக்கத்தினரோ அல்லது மற்றவரோ நமக்கு உதவி என்றால் செய்ய தயங்குவார்கள். ஒழுக்கமற்றவனைக் கண்டாலே அனைவரும் இவனுடைய பெற்றோர்களின் வளர்ப்பு முறை சரியில்லை என்றே கூறுவார்கள்"*

என்ற கருத்தின் வழி ஒரு மாணவர் ஒழுக்கம் இல்லையேல் தீமையே ஏற்படும் என்ற சிந்தனையை ஆணித்தரமாகத் தன் கட்டுரையில் முன்னுரைத்துள்ளார். ஆக, திருக்குறளை உய்த்துணர்தலின் வழி மாணவர்கள் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர் என்பது ஆய்வில் நிருப்பிக்கப்பட்டுள்ளது.

தீர்மானித்தல் அடிப்படையில்,

- பெரியர்களிடம் நல்ல பண்புகளைக் கொண்டு நடப்பர் என்று தீர்மானித்தனர்.

ஆய்வின் முடிவின் படி, ஆய்விற்கு உட்பட்ட 20 மாணவர்களில் 12 மாணவர்கள் இனிமேல் பெரியர்களிடம் நல்ல பண்புகளைக் கொண்டு நடக்க வேண்டும் என்ற முடிவினை எடுத்துள்ளனர். திருக்குறளை மாணவர்கள் நன்கு பகுத்தாராய்ந்ததால், இனிமேல் பெரியவார்களிடம் நல்ல பண்புகளைக் கொண்டு நடக்க வேண்டும் என்று தீர்மானித்தை மாணவர்கள் முன் வைக்கத் திருக்குறள் வித்திட்டுள்ளது. மாணவர்கள், தங்களின் அறிவின் முதிர்ச்சிக்கு ஏற்ப தங்களின் அன்றாட வாழ்வில் நிகழும் நிகழ்வுகளைத் திருக்குறளுடன் தொடர்ப்புப்படுத்தி தீர்மானங்களைக் கருத்துக்களாக முன் வைத்திருந்தனர். பெரியவர்கள் என இம்மாணவர்கள், குறிப்பிடுவது, பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அவர்களைக் காட்டிலும் மூத்தவர்கள் ஆகும். இதற்குச் சான்றாக ஒரு மாணவன்,

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

> *"குடும்பத்தில் குடும்ப உறுப்பினர்கள் யாவரும் நன்னடத்தையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு குழந்தை முன்னிலையில் கடுஞ்சொற்கள் பேசக்கூடாது. மேலும், பெரியவர்கள் பேசும் போது நாம் குறுக்கே பேசக் கூடாது. அதுமட்டுமின்றி, வகுப்பில் ஆசிரியர் இருக்கும் போதும் சத்தம் போடக் கூடாது."*

போன்ற தீர்மானங்களைத் தன் கட்டுரையில் , திருக்குறளை உய்த்துணர்தல் வழி வெளிக்காட்டிருந்தான்.

- ஒழுக்கத்தை மிக உயர்வாகக் கருத வேண்டும் என்று தீர்மானிப்பர்.

ஆய்வில் கிடைக்கப் பெற்ற தகவலின் படி, ஆய்விற்கு உட்படுதப்பட்ட 20 மாணவர்களில் 9 மாணவர்கள் ஒழுக்கத்தை மிக உயர்வாகக் கருத வேண்டும் என்ற சிந்தனையைத் தீர்மானித்துள்ளனர். இவ்வாய்வில் ஒரு மாணவன் மிக சிறப்பாக ஒரு மனிதனுக்குப் பக்தியை விட ஒழுக்கமே இன்றியமையாத கூற வாழ்க்கையில் அமைய வேண்டும் என்ற தீர்மானித்தைக் கருத்தாக வெளியிட்டுள்ளான்.

> *"அதாவது, ஒரு மனிதனுக்குப் பக்தி இருந்தாலும் இல்லாவிடிலும் ஒழுக்கம் இருக்க வேண்டும். ஒழுக்கமே வாழ்க்கைக்குச் சிறந்தது என்பதால் அதனை நாம் பேணிக் காக்க வேண்டும்."*

என்று குறிப்பிட்டுள்ளான். மனிதர்களிடையே இருக்க வேண்டிய பண்புகளில் மிக உயரிய பண்பான ஒழுக்கத்தை உயர்வாக நாம் கருத வேண்டும் என்ற சிந்தனையைத் திருக்குறளின் வழி மாணவர்கள் உணர்ந்துள்ளார்கள் என்பது ஆய்வின் வழி அறியலாம்.

நிருபித்தல் அடிப்படையில்

- ஒழுக்கமின்மையால் நடந்த சம்பவங்களை எடுத்துக்காட்டாகத் தருவர்.

ஆய்வின் கிடைக்கப்பெற்ற தகவலின் படி, ஆய்விற்கு உட்படுதப்பட்ட 20 மாணவர்களில் 3 மாணவர்கள் மட்டுமே ஒழுக்கமின்மையால் நடந்த சம்பவத்தை எடுத்துக்காட்டாகத் தந்துள்ளார். இம்மாணவர்கள் படிவம் ஒன்றைச் சார்ந்தவர்களே ஆகும். ஆகையால், பெரும்பாலான மாணவர்களால் நடப்பியல் சம்பவங்களை அதிகம் ஒழுக்கத்திற்குத் தொடர்ப்புப்படுத்த இயலவில்லையே எனலாம். மேலும், பள்ளிகளில் ஆசிரையர்களும் திருக்குறளைக் கற்பிக்கும் போது, நடப்பியல் எடுத்துக்காட்டுகளுடன் திருக்குறளைக் கற்பிக்காதது ஒரு காரணமாகும் என நேர்காணலின் போது ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டு இருந்தார்.

- ஒழுக்கக் கேடான செயல்களை எடுத்துக்காட்டாகத் தருவர்.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

ஆய்வின் முடிவின் படி, 10 மாணவர்கள் ஒழுக்கக் கேடான செயல்களை எடுத்துக் காட்டுகளாகக் கட்டுரையில் தந்துள்ளனர். இம்மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் பார்க்கும் மற்றும் கேட்கும் ஒழுக்கக் கேடான செயல்களைத் திருக்குறளுடன் தொடர்புப்படுத்திச் சிந்ததனால் இக்கருத்துக்களைக் கட்டுரையில் வெளிக்காட்ட முடிந்தது. இம்மாணவர்கள் யாவரும் புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற செயல்களை ஒழுக்கக் கேடான செயல்கள் என கட்டுரையில் எழுதியுள்ளனர். எடுத்துக்காட்டாக,

> *"தற்போது, தற்கால இளைஞர்களிடையே அதிகம் குடிப்பழக்கம், புகைப்பிடித்தல் போன்ற பழக்கங்கள் ஊடுருவி வருகின்றனர். இக்காலத்து இளைஞர்கள் புகைப்பிடித்தல் மற்றும் குடிக்கும் பழக்கத்தை ஒரு நாகரீகமாகக் கருதுகின்றனர்."*

என்று கட்டுரையில் ஒரு மாணவன் தன் கருத்தினை வெளிக்காட்டியுள்ளான்.

## முடிவுரை

இவ்வாய்வின் வழி திருக்குறளின் வாயிலாகப் பெரும்பாலான மாணவர்களின் ஆய்ந்து சிந்திக்கும் திறன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனைக் காண முடிகின்றது. தொடர்ந்து, தமிழர்களின் இலக்கியங்கள் யாவும் சிந்தனையைத் தட்டி எழுப்பக் கூடிய பொங்கிஷங்கள் என்பதனை இவ்வாய்வின் வழி மெய்பிக்கப்பட்டுள்ளது. இரண்டே அடிகளில் திருக்குறள் எழுதப்பட்டாலும், இவ்விரண்டு வரிகள் மாணவர்களின் சிந்தனைத் திறனைத் தூண்டியுள்ளது என்பதனை இவ்வாய்வின் வழி காணலாம். அதுமட்டுமின்றி, இவ்வாய்வின் வழி, திருக்குறள் மாணவர்களைப் பல கோணங்களில் சிந்திக்க வைத்துள்ளது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. ஆக, நமது தமிழ் இலக்கியங்களில் ஒன்றான திருக்குறள் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கு ஏற்ற சிறந்த கருவி ஆகும். ஆக, இவ்வாய்வில் திருக்குறள் மாணவர்களின் ஆய்வுச் சிந்தனைக்கு வித்திடுகின்றது என்பது நிருப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்களே மாணவர்களின் ஆய்வுச் சிந்தனை வளர்கும் ஒரு முக்கியத் தளமாகச் செயல்படுகின்றது. ஆகவே, ஆசிரியர்கள் தங்கள் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் இலக்கியங்களைக் கற்பிக்கும் போது, மாணவர்களின் சிந்தனைத் திறன்களுக்கு முக்கியத்துவம் அளித்து கற்றல் கற்பித்தலை நடத்த வேண்டும்.

## மேற்கோள் நூல்கள்:

1. Narayanasamu, K. (2012). *Sintikka karpittalum sintanai karpittalum* (சிந்திக்கக் *கற்பித்தலும் சிந்தனையைக் கற்பித்தலும்.*). Kuala Lumpur: Radan Creatif.
2. Kartheges, P. (2015). *Komponen kesusasteraan tamil dalam sukatan pelajaran SJK(T).* Kuala Lumpur: Universiti Malaya.

Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)
Volume 1- Issue 1 (2017), Pages 39-50 / ISSN: eISSN 2590-3691

3. Rajendran, N. S. (2008). *Education: Tamil education and teeching in Malaysia* (*ஆசிரியம்: மலேசியாவில் தமிழ்க் கல்வியும் கற்றல்.*). Kuala Lumpur: Uma Publication.
4. Visvanatha, K. A. P. (1953). *Valluvar and Kural* (*வள்ளுவரும் குறளும்*). Chennai: Pari Publication.
5. Varatarasan, M. (2000). *Thirukkural (திருக்குறள்)*. Thirunelveli: Saiva Siddhanntha Publication.